ä É¢Â ý Å í ¸¢ ° Æ¢Â÷ º í ¸ õ (¾Á¢ú¿¡ Î )
AIBEA - AIUBEA ¯ ¼ ý þ ! " ¸#$%¼&
º¢ í ¸# ' ÷ $¢ ( ¡ º ¡) *Å& ¾ ( õ) +, -) .¢ í ¸¢ /º%0 /¾1) /º ý É - ,22 22+
/¾¡ . 3$º¢ 4 2---56*678+7) 9---2678+7 Á¢ ý : ; º< 4 =>?=@A B CDEFGH IJD

சுற்றறிக்கை எண்:145:2018 15.12.2018

அன்பார்ந்த தோழர்களே !

வங்கி ஊழியர் சங்கங்களின் கூட்டமைப்பு பொதுத்துறை வங்கிகள் இணைப்பை எதிர்த்து வரும் டிசம்பர் 26 அன்று ஒரு நாள் அகில இந்திய வேலைநிறுத்தத்திற்கு அறைகூவல் விடுத்துள்ளது. மத்திய தொழிற்சங்கங்கள் இணைந்து வரும் ஜனவரி 8-9 ஆகிய தேதிகளில் 30 கோடிக்கும் அதிகமான தொழிலாளர்கள் பங்குபெறவுள்ள அகில இந்திய வேலைநிறுத்தத்திற்கு அறைகூவல் விடுத்துள்ளது. இந்தச் சூழலில் வங்கி ஊழியர்களையும், அதிகாரிகளையும் தொடர் போராட்டத்திற்கு தயாரிப்பதற்குப் பதிலாக, நமது மாநிலத்தில் செயல்படும் சிறுபான்மை சங்கம் ஊழியர்களை குழப்பி ஆதாயம் தேட முற்பட்டுள்ளது வருத்தத்திற்குரியது. கடந்த சில நாட்களாக நடைபெறும் அவர்களது செயல்பாடுகளின் விளைவே இந்தச் சுற்றறிக்கை.

வங்கிகளில் ஊழியர் நியமனம் தேவை என்பதற்கான தொடர் போராட்டங்களின் விளைவாக வங்கித்துறையில் கடந்த சில ஆண்டுகளாக அதிக எண்ணிக்கையில் ஊழியர்களும், அதிகாரிகளும் பணியில் சேர்ந்து வருகின்றனர். புதிதாகச் சேர்ந்த தோழர்களுக்கு கடந்த கால வரலாறு தெரிய வாய்ப்பில்லை என்பதனால், சிறுபான்மை சங்கம் தவறான தகவல்கள் மூலம் ஊழியர்களை குழப்பி, வெகுவாகக் குறைந்துவிட்ட தனது உறுப்பினர் எண்ணிக்கையை மேம்படுத்த முயன்று வருகிறது.

யூனியன் வங்கியில் ஒன்றுபட்ட சங்கமாக இருந்த அமைப்பாகிய யூனியன் வங்கி ஊழியர் சங்கம் 1980ஆம் ஆண்டு மார்ச் 16ஆம் நாள் பிளவுபடுத்தப்பட்டது. ஜனநாயக நடைமுறையில், ஒருமித்த கருத்து ஏற்படாத நிலையில், பெரும்பான்மை முடிவை சிறுபான்மை ஏற்கவேண்டும் என்ற அடிப்படைக்கு மாறாக சில தோழர்கள் தங்களது சுயலாபங்களுக்காக 16.03.1980 அன்று நடைபெற்ற சிறப்பு மாநாட்டின் முடிவை ஏற்காமல் ஒரு போட்டி சங்கத்தை 17.03.1980 அன்று ஆரம்பித்தனர். பின்னர் அது BEFI அமைப்பில் இணைந்தது. அடிப்படை ஜனநாயக நடைமுறைகளை ஏற்காதவர்கள், எப்படி ஒரு ஜனநாயக அமைப்பை நடத்த இயலும் ?

யூனியன் வங்கியில் அகில இந்திய அளவில், ஊழியர்கள் ஒன்றுமைக்கு எதிராக செயல்பட்டவர், அப்போது அகில இந்திய யூனியன் வங்கி மகாசம்மேளனத்தின் பொதுச்செயலாளராக இருந்த தோழர்.சாந்தி பரதன் ஆவார். அவர்தான் யூனியன் வங்கியின் முதல் ஊழியர் பிரதிநிதியாக, வங்கியின் நிர்வாக போர்டில் இயக்குனராக இருந்தவர். அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் மரபின்படி, ஒருவர் ஒருமுறை மூன்று ஆண்டுகள் மட்டுமே இயக்குனராக இருக்கமுடியும் என்ற நிலையில், தான் இயக்குனராக தொடரவேண்டும் என்ற நோக்கில், அகில இந்திய அமைப்பை பிளவுபடுத்தி, 12 ஆண்டு காலம் வங்கியின் இயக்குனராகச் செயல்பட்டார். இதுதான் ஜனநாயகமா, தலைமைப் பண்புகளா ?

"உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்" என்பது தான் பொதுவுடைமை இயக்கங்களின் அடிப்படை கொள்கை. இந்திய நாட்டிலுள்ள உழைக்கும் மக்களில் சுமார் 8% மட்டுமே அமைப்புரீதியாக திரட்டப்பட்டுள்ளனர். மீதமுள்ள 92% தொழிலாளர்களை அணிதிரட்டுவதற்குப் பதிலாக, ஏற்கனவே அணிதிரட்டப்பட்டுள்ள வங்கி ஊழியர்களை பிளவுபடுத்தி அமைக்கப்பட்டதே BEFI சங்கம். இதுதான் இவர்களின் சித்தாந்தம், கொள்கை.

வங்கி ஊழியர் சங்கங்களின் கூட்டமைபில் ஒன்பது சங்கங்கள் உள்ளன. மகாராஷ்டிரத்தில் செயல்படும் சிவசேனா அமைப்பின் தொழிற்சங்கம் வங்கி ஊழியர் சங்கங்களின் கூட்டமைபில் சேர முன்வந்த போது, ஒன்பது சங்கங்களும், சிவசேனா சங்கம் மதவாத/இனவாத சங்கம் என்பதனால் அதனை கூட்டமைபில் சேர்க்கவில்லை. இந்த நிலையில் தாங்கள் தான் இடதுசாரி இயக்கங்களுக்கே தலைமை என்று மார்தட்டிக்கொள்ளும் BEFI அமைப்பு யூனியன் வங்கியில் எடுத்துள்ள நிலைபாடு தான் என்ன ? அனைவராலும் ஒதுக்கப்பட்ட மதவாத/இனவாத/பிராந்தியவாத அமைப்பான சிவசேனா தொழிற்சங்கத்தை தன்னுடன் இணைத்துக் கொண்டுள்ளது. இது தான் இவர்களது உண்மை முகம். இடதுசாரி சித்தாந்தம் என்பது வெளிவேடம்.

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் மற்றும் அகில இந்திய வங்கி அதிகாரிகள் சங்கம் ஆகியவற்றின் முயற்சியின் காரணமாகவே 1993ஆம் ஆண்டு ஓய்வூதியம் குறித்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. 1993-1995 காலகட்டத்தில், BEFI, AIBOC, NCBE ஆகிய சங்கங்கள் Joint Action Committee (JAC) என்ற அமைப்பினை ஏற்படுத்தி சுமார் 3,50,000 வங்கி ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் ஓய்வூதியத்திற்கு விருப்பம் தெரிவிப்பதைத் தடுத்தனர். 15 ஆண்டுகளுக்குப்பின், உறுப்பினர்களின் எதிர்ப்பின் காரணமாக, தங்கள் தவற்றை உணர்ந்து, வேறு வழியில்லாமல், ஓய்வூதியத்திற்கு மீண்டும் ஒரு வாய்ப்பு வழங்கக் கோரினர். வங்கி ஊழியர் சங்கங்களின் கூட்டமைப்பின் தொடர் போராட்டங்களின் காரணமாக 01.04.2010 முதல் ஓய்வூதியம் பெற மீண்டும் ஒரு வாய்ப்பு வழங்கப்பட்டது. இவர்களது தவறான வழிகாட்டுதலால் ஊழியர்களால் அதற்கான மிகப்பெரிய விலையும் கொடுக்கப்பட்டது. அதாவது இனிமேல், **01.04.2010க்கு பின் பணியில் சேரும் ஊழியர்களுக்கு இந்த ஓய்வூதியம் வழங்கப்படமாட்டாது என்றும் அவர்களுக்கு புதிய ஓய்வூதியத்திட்டம் (New Pension System) அமல்படுத்தப்படும் என்றும் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.** BEFI, AIBOC, NCBE ஆகிய சங்கங்கள் 1992-1995 ஆண்டுகளில் மேற்கொண்ட நடவடிக்கையின் காரணமாக 01.04.2010க்குபின் வங்கியில் சேர்ந்த ஊழியர்கள் சிறந்த ஓய்வூதியத்தை இழந்துள்ளனர்.

மத்திய அரசு ஊழியர்களுக்கும், மாநில அரசு ஊழியர்களுக்கும் 01.01.2004 முதல் புதிய ஓய்வூதியத் திட்டம் அமல்படுத்தப்பட்டும், வங்கித்துறையில் 2010 வரை பழைய ஓய்வூதியத் திட்டம் பாதுகாக்கப்பட்டு வந்தது. 2010ஆம் ஆண்டு சுமார் 3,50,000 ஊழியர்கள், அதிகாரிகள் ஓய்வூதியம் பெறுவதற்காக, புதிய ஓய்வூதியத்திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.

வங்கித்துறையில் கணினிகளை முழுமையாக எதிர்த்தது BEFI அமைப்பு. கணினிகளை ஒப்பந்தங்கள் மூலம் கட்டுப்படுத்தி, ஊழியர்களுக்கு தேவையான பயிற்சிகள் அளித்து, வங்கித்துறை சிறப்பாக செயல்பட உதவியது அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம்.

எந்த ஒரு அமைப்பின் உள்ளாக்கமும், செயல்பாடும், அந்த அமைப்பின் தலைவர்களின் செயல்பாடுகளை ஒட்டியே அமையும் என்பது அனைவரும் அறிந்ததே.

குறைந்தபட்சம் தலைவராக இருப்பவர், தான் பிறருக்கு சொல்வதை தான் கடைபிடிக்கவேண்டும். 1993-1995 ஆண்டுகளில், பல சுற்றறிக்கைகள், விளக்கக்கூட்டங்கள், பரப்புரைகள் மூலம் தங்களது உறுப்பினர்களை ஓய்வூதியத்திற்கு விருப்பம் வழங்காமல் தடுத்தனர். அதன் காரணமாக பல ஊழியர்கள் 2010ஆம் ஆண்டில் பல ஆயிரம் பணம் செலுத்தி ஓய்வூதியம் பெற்றனர். ஓய்வு பெற்ற ஊழியர்கள், தாங்கள் பெற்ற வருங்கால வைப்பு நிதியை விட 56% அதிகம் செலுத்தி ஓய்வூதியம் பெற்றனர். அதே சமயம், தமிழக அளவில் தலைவர்களாக இருந்த தோழர்.S.கோதண்டராமன், தோழர்.S.R.ராஜகோபாலன் நாயர், தோழர்.U.வாசுகி, தோழர்.S.ஆறுமுக நயினார் ஆகியோர் உட்பட பல தலைவர்கள், கடைசி நாளில் ஓய்வூதியத்திற்கு விருப்பம் தெரிவித்து, ஓய்வூதியம் பெற்றுவருகின்றனர். இத்தகைய ஊருக்கு உபதேசம் செய்யும் தலைவர்களா ஊழியர் நலனில் அக்கறையுடன் செயல்படப் போகிறார்கள். அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் கையெழுத்திட்ட ஓய்வூதியம், கணினி ஒப்பந்தம் தங்களுக்கு மட்டுமே பயன் தரும், உறுப்பினர்களுக்கு உதவாது என்ற லட்சியமிக்க தலைவர்கள் தான் BEFI அமைப்பைச் சார்ந்தவர்கள்.

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் ஜாதி, மதம், இனம், மொழிகளைக் கடந்த ஒரு அமைப்பு. எந்த அரசியல் கருத்தில் ஈடுபாடு கொண்டவர்களும் நமது அமைப்பில் தலைவர்களாகலாம். இன்றும் பல்வேறு கருத்துக்களில் நம்பிக்கை கொண்டவர்கள் தலைவர்களாக செயல்பட்டு வருகிறார்கள்.

அகில இந்திய யூனியன் வங்கி ஊழியர் சங்கம் ஊழியர் பணிவரன்முறைகளில் முன்னேற்றம் ஏற்படுத்தியும், ஊழியர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியும், வங்கியின் வளர்ச்சியில் பங்கு கொண்டு சிறப்பாகப் பணியாற்றி ஒட்டுமொத்த ஊழியர்களின் நம்பிக்கை பெற்றுள்ளது. 1988ஆம் ஆண்டுக்கு முன்பு இருந்த இடமாற்றல் கொள்கை மாற்றப்பட்டு, ஊழியர் விரும்பினால் மட்டுமே இடமாற்றல் என்ற கொள்கை கொண்டுவரப்பட்டது வேறு எந்த வங்கியிலும் இல்லாத ஒன்று.

விருப்பமுள்ள ஊழியர்கள் பதவிஉயர்வு பெறும் வகையில் வங்கியில் சேர்ந்து இரண்டு ஆண்டுகளில் அதிகாரியாக பதவிஉயர்வு பெறும் வாய்ப்பும், அதே சமயம் ஒரே இடத்தில் பணியாற்ற விரும்பும் ஊழியர்களுக்கு அவர்கள் விரும்பும் வரை அதே ஊரில் இருக்கும் வாய்ப்பையும் ஏற்படுத்தியது நமது சங்கம். சிறப்பு உதவியாளர்கள், காசாளர்கள் போன்ற பதவிகளுக்கு, விருப்பமான கிளைக்கு விண்ணப்பித்து செல்லும் வகையில் ஒப்பந்தம் ஏற்படுத்தியது நமது சங்கம்.

பல வங்கிகளில் நட்டத்தின் காரணமாக ஊழியர் நலத் திட்டங்கள் நிறுத்தப்பட்ட நிலையில், யூனியன் வங்கியில், நமது அமைப்பின் முயற்சியின் காரணமாக பல நலத்திட்டங்கள் தொடர்கிறது. தற்போது, அனைத்து நலத்திட்டங்களையும் அமல்படுத்திட நிர்வாகம் முன்வந்துள்ளது. பணமதிப்பிழப்பு நடவடிக்கையின் காரணமாக பணியாற்றிய ஊழியர்களுக்கு அதற்கான ஓவர்டயம் பல வங்கிகளில் வழங்கப்படாதபோது, நமது சங்கத்தின் முயற்சியின் காரணமாக, யூனியன் வங்கியில் வழங்கப்பட்டது.

ஊழியர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவேண்டும் என்ற நோக்கத்தில், சங்கம் பல நலத்திட்டங்களை அமல்படுத்தி வருகிறது. தமிழகத்தில் சங்கத்தின் முயற்சியின் காரணமாக 150க்கும் மேற்பட்ட துணைநிலை ஊழியர்கள், பட்டதாரிகளாகி எழுத்தர்களாகப் பதவிஉயர்வு பெற்றுள்ளனர். சங்கத்திலிருந்து மருத்துவ உதவி, கல்வி ஊக்கத்தொகை, இறப்பு இழப்பீடு, திருமணப்பரிசு, மாற்றுத்திறனாளிகளுக்கு உதவித்தொகை, ஓய்வு பெறும்போது நினைவுப்

பரிசு, மைல்கல் விருதுகள், முன்னாள் படைவீரர்களை சிறப்பித்தல் ஆகிய நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது.

ஊழியர் நல நிதியின் கீழ், பணிக்காலத்தில் உயிரிழக்கும் ஊழியர்கள் குடும்பத்திற்கு ரூ.2 லட்சம் வழங்கப்படுகிறது. ஊழியர்கள் ஓய்வு பெறும்போது கணிசமான தொகை வழங்கப்படுகிறது. நிதி வசூலிப்போர் மற்றும் நகை மதிப்பீட்டாளர்களுக்கு வருடத்ததிற்கு ரூ.25,000/- வரை மருத்துவ உதவி வழங்கப்படுகிறது.

அகில இந்திய யூனியன் வங்கி ஊழியர் சங்கம் கையெழுத்திட்ட ஒப்பந்தங்கள் எல்லாம் அனைவருக்கும் பலன் அளிக்கக்கூடியது. ஆனால் BEFI கையெழுத்திட்ட ஒப்பந்தத்தின் கீழ் பொதுச்செயலாளர் பணியாற்றிய இந்தியா எக்சேஞ்ச் கிளையில் 35 சிறப்பு உதவியாளர் பதவிகளும், தலைவர் பணியாற்றிய மும்பை சமாச்சார் மார்க் கிளையில் 35 சிறப்பு உதவியாளர் பதவிகளும் ஏற்படுத்தப்பட்டன. பிற மாநிலங்களுக்கோ, கிளைகளுக்கோ இந்த அளவு சிறப்பு உதவியாளர் பதவிகள் வழங்கப்படவில்லை. கொல்கத்தாவில் மட்டும் கடிகாரத்தை சாவி கொடுப்பதற்கான அலவன்ஸ் வழங்க வகை செய்தது BEFI அமைப்பு.

BEFI என்ற அமைப்பு ஆரம்பிக்கப்பட்டு 38 ஆண்டுகள் மேலாக ஆகியும், இன்று வரை எந்த வங்கியிலும் அந்த அமைப்பு பெரும்பான்மை பெறவில்லை. பொதுத்துறை வங்கிகளில் பாரத் ஸ்டேட் வங்கி, பாங்க் ஆப் பரோடா, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ஆகியவற்றில் NCBE அமைப்பு பெரும்பான்மை சங்கமாகும். இதர வங்கிகள் அனைத்திலும், அகில இந்திய வங்கி ஊழியர் சங்கமே பெரும்பான்மையாகவுள்ளது.

தமிழக யூனியன் வங்கியில் 1980ஆம் ஆண்டு பிளவின்போது சுமார் 45% ஊழியர்கள் BEFI அமைப்பில் இருந்தனர். அந்த அமைப்பின் உண்மை நிலை, செயல்பாடுகளை உணர்ந்து, பின்னர் சிறிது சிறிதாக பல தலைவர்கள் உட்பட பெரும்பான்மையான ஊழியர்கள், வங்கி ஊழியர் தேசிய நீரோட்டமான அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தில் தங்களை இணைத்துக்கொண்டனர். இன்று தமிழகத்தில் நமது சங்கத்தைச் சார்ந்த தோழர்களின் எண்ணிக்கை சுமார் 92%.

சமீபத்தில் பாண்டிச்சேரியில் நடைபெற்ற யூனியன் பாங்க் ஆப் இந்தியா ஊழியர் சங்க மாநாட்டில் கலந்துகொண்ட தோழர்களின் எண்ணிக்கை 46 மட்டுமே. அதில் நடைபெற்ற பொதுச்செயலாளர் பதவிக்கான தேர்தலில் 25 வாக்குகள் பெற்றவர் வெற்றிபெற்றுள்ளார். அதில் தோல்வி அடைந்தவர் சங்கத்தின் தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ளார். இவை அவர்களது உறுப்பினர் எண்ணிக்கை, பலம், ஜனநாயகத்தன்மையை வெளிப்படுத்துகிறது.

வங்கியின் நலன் காத்திடவும், போராடி உரிமைகள் பெற்றிடவும், பெற்ற உரிமைகளைக் காத்திடவும், ஊழியர் வாழ்க்கைத்தரம் உயர்ந்திடவும், நேர்மையான, திறந்த நம்பகத்தன்மையுடன் கூடிய ஜனநாயக அமைப்பான யூனியன் வங்கி ஊழியர் சங்கத்தை மேலும் பலப்படுத்திடுவோம். தவறான வழி காட்டுதல்களுக்கு ஆட்பட்டுள்ள சிறுபான்மை சங்கத்தின் உறுப்பினர்களுக்கு உண்மை நிலையை உணர்த்தி, அவர்களையும் வங்கி ஊழியர் தேசிய நீரோட்டமாம் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தில் இணைத்திடுவோம்.

தோழமை வாழ்த்துக்களுடன்,

**(அ.சிதம்பரம்)**
**பொதுச் செயலாளர்**